# சாரநாதன் பொறியியல் கல்லூரி
# பெண்கள் விடுதி
# திருச்சிராப்பள்ளி

**விடுதி நடைமுறை விதிகள் 2014 -2015**

**விடுதி அலுவலக தொலைபேசி எண்கள்:**

**8489915218**

1. கல்லூரி விடுதியில் தங்கும் மாணவிகள் யாவரும் தங்களை காண வரும் பெற்றோர்கள் மற்றும் பெற்றோர்களால் அங்கீகரிக்கப்பட்ட திருமணமான பாதுகாவலரின் முழு முகவரியையும் (Full Postal Address, Pincode, Phone No with STD code) புகைப்படத்தையும் கொடுக்க வேண்டும். இவர்களைத் தவிர வேறு யாரும் விடுதி மாணவிகளைச் சந்திக்க அனுமதிக்கப்படமாட்டார்கள்.

2. ஒவ்வொரு விடுதி மாணவிக்கும் இரண்டு பார்வையாளர் அட்டை மட்டுமே (Parents & Local Guardian) வழங்கப்படும். ஒன்றை தாய், தந்தையர் பயன்படுத்த வேண்டும். மற்றொன்றை திருமணமான பாதுகாவலர் பயன்படுத்த வேண்டும். திருமணமான பாதுகாவலர் இல்லாத மாணவிகள் ஒரு பார்வையாளர் அட்டையை மட்டும் பெற்றுக் கொள்ளும்படியாகக் கேட்டுக் கொள்கிறோம்.

3. பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்கள் அடையாள அட்டையை விடுதி அலுவலகத்தில் காண்பித்து உரிய அனுமதி பெற்ற பின்னரே மாணவியரை ஞாயிற்றுக்கிழமை மற்றும் கல்லூரி விடுமுறை நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை சந்திக்க அனுமதிக்கப்படுவார்கள். மாலை 5.00 மணிக்கு மேல் எக்காரணத்தைக் கொண்டும் எவரும் மாணவியரை சந்திக்க அனுமதிக்கப்படமாட்டார்கள்.

4. விடுதி மாணவியரை பார்க்க வரும் பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்கள் விடுதிகாப்பாளர் மற்றும் விடுதி பாதுகாவலரின் முன் அனுமதி பெற்ற பிறகுதான் மாணவிகளை சந்திக்க வேண்டும். மாணவியரிடம் நேரடியாகத் தொடர்பு கொள்ளக்கூடாது.

5. வகுப்பு நடக்கும் நேரங்களில் விடுதி மாணவியரைச் சந்திக்க எக்காரணத்தை முன்னிட்டும் பெற்றோர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள். அவசியம் ஏற்பட்டால் மட்டுமே முதல்வர் அல்லது துறைதலைவர் அனுமதியுடன் அனுமதிக்கப்படுவார்கள்.

6. எக்காரணத்தை முன்னிட்டும் விடுதி மாணவிகள் விடுமுறை நாட்களிலும் மற்ற நாட்களிலும் வீட்டிற்கு தனியாக செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள்.

7. மாணவிகளின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் யாரவது ஒருவர் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டையைக் காண்பித்து மாணவியை வந்து அழைத்துச் செல்ல வேண்டும். புகைப்பட அடையாள அட்டை இல்லாதவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

8. விடுமுறை நாட்களில் வீட்டிற்கு செல்லும் மாணவிகள் குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட நேரத்தில் (காலை 7.00 மணிக்குள்) விடுதிக்கு திரும்பி வந்துவிட வேண்டும்.

9. கல்லூரி நாட்களில் வெளியூர் செல்ல விடுப்பு தேவையெனில் பெற்றோர்களிடமிருந்து முன் அனுமதிக்கான கடிதத்தை விடுதிக்காப்பாளரிடம் ஒப்படைத்தால் மட்டுமே விடுப்பு வழங்கப்படும்.

10. மாணவியர்கள் விடுமுறை முடிந்து விடுதி திரும்பியதும், விடுதிக் காப்பாளருக்கு தங்களது வருகையினை தெரியப்படுத்த வேண்டும்.

11. மாணவிகள் தங்கும் அறை, கழிவறை, குளியலறைகளை மற்றும் பொது இடங்களை சுத்தமாக வைத்திருக்க வேண்டும். மேலும் தங்களது அறைகளில் துண்டு காகிதங்கள் போடுவதோ, சுவரில் புகைப்படங்களை ஒட்டுவதோ, கண்ட இடங்களில் தண்ணீர் ஊற்றுவதோ கூடாது.

12. மாணவியர் உணவை தங்கள் அறைக்கு எடுத்துச் செல்லக்கூடாது.

13. எல்லா மாணவியரும் ஒவ்வொரு நாளும் படிப்பதற்கென்று ஒதுக்கப்பட்ட நேரத்தில் அமைதி காத்து கருத்துடன் படித்து அனைத்து பாடங்களிலும் முதல் முயற்சியிலேயே முழு வெற்றி பெற வேண்டும்.

14. விடுதி மாணவிகள் தங்களது அறைகளில் தேவையான பாடப் புத்தங்களை தவிர மற்ற எந்த கதைப் புத்தகங்கள், இஸ்திரி பெட்டி, கேமிரா மற்றும் ட்ரான்ஸிஸ்டர் வைத்திருக்கக் கூடாது. அப்படி வைத்திருந்தால் உடனடியாக தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

15. யாருக்காவது உடல் நலக்குறைவு ஏற்பட்டால் உடனடியாக விடுதி காப்பாளரிடம் தெரியபடுத்தினால் அவருக்கு தேவையான மருத்துவ உதவி ஏற்பாடு செய்யப்படும். மற்றவர்களுக்கு பரவக்கூடிய உடல் நலக்குறைவாக இருந்தால் தானே தன்னை தனிமைப்படுத்திக் கொள்வது நல்லது.

16. விடுதி மாணவிகள் உடல் நலக்குறைவுக்காக மருந்து, மாத்திரைகள் தனிப்பட்ட முறையில் தன்னிடம் வைத்துக் கொள்ள வேண்டியிருப்பின், அது குறித்து விடுதிக் காப்பாளரிடம் கூறி முன் அனுமதி பெற்றிருக்க வேண்டும்.

17. விடுதி மாணவிகள் உடல் நலக் குறைவுக்காக தாங்கள் வைத்து இருக்கும் மருந்து, மாத்திரைகள் முதலியவைகளை விடுதிக் காப்பாளருக்கு தெரியாமல் மற்ற மாணவிகளுக்கு கொடுக்கக் கூடாது.

18. மாணவிகளின் பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்கள் மாணவிகள் தங்கும் அறைக்குள் செல்லக்கூடாது மேலும், விடுதியிலுள்ள மாணவிகளைத் தவிர மற்ற எந்த மாணவியரும் (Day Scholar) விடுதிக்கு வர அனுமதிக்கப்படமாட்டார்கள்.

19. தொலைபேசியில் மாணவியரோடு பேசுவதற்கு தாய், தந்தை மற்றும் பாதுகாவலர் ஆகியோர் கீழ்கண்ட எண்களில் மட்டுமே தொடர்பு கொள்ள வேண்டும்.

8489915218

கல்லூரி விடுதியில் தங்கி படிக்கும் மாணவிகளின் பெற்றோர் மற்றும் பாதுகாவலர் எங்களுடைய இந்த தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ள வேண்டும்.

20. விடுதி மாணவியருக்கு சந்தேகப்படும் வகையில் கடிதமோ அல்லது தொலைபேசித் தொடர்போ வந்தால் அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

21. பெற்றோரிடமிருந்து வரும் கடிதங்கள் மட்டுமே மாணவிகளுக்கு கொடுக்கப்படும். மற்ற கடிதங்கள் எதுவும் மாணவிகளிடம் கொடுக்கப்படமாட்டாது.

22. உணவு வேளைக்கு மணி அடித்தவுடன் மாணவிகள் அனைவரும் உடன் வந்து அமைதியான முறையில் உணவருந்திச் செல்ல வேண்டும். நேரங்கடந்தோ அல்லது கடைசி நேரத்திலோ உணவறைக்கு வருவதை தவிர்க்க வேண்டும்.

23. விடுதி மாணவிகள் எக்காரணத்தை முன்னிட்டும் விடுதியில் வேலை பார்க்கும் ஊழியர்களிடம் எவ்வித பேச்சு வார்த்தையோ அல்லது தொடர்போ வைத்துக் கொள்ளக் கூடாது. அவர்களிடம் பொருட்களை வாங்கி வரச் சொல்லக் கூடாது.

24. விடுதி விதி முறைகளை கடைபிடிக்கத் தவறும் மாணவிகளை எவ்வித விசாரணையும் இன்றி விடுதியிலிருந்து உடனடியாக வெளியேற்ற விடுதி நிர்வாகத்திற்கு முழு உரிமை உண்டு.

25. விடுதி மாணவிகள் தக்க காரணமின்றி வெளியே செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள் விடுதியில் தங்கும் மாணவிகள் தங்கம், வைரம் போன்ற விலை உயர்ந்த நகைகளை அணிந்து வந்தால், அதன் பாதுகாப்பிற்கு அவர்களே பொறுப்பாவார்கள் இது சம்பந்தமாக நிர்வாகத்தை அணுகக்கூடாது.

26. விடுதி மாணவிகள், விடுதியில் தங்கி படிக்காத மாணவிகள் (Day Scholar) மூலமாக கடிதங்கள் மற்றும் பொருட்கள் அனுப்புவதும், பெறுவதும் மற்றும் அவர்களுடன் வீட்டிற்கு செல்வதும் தெரிய வந்தாலோ அல்லது கண்டுபிடிக்கப்பட்டாலோ விடுதியிலிருந்து உடனடியாக நீக்கப்படுவார்கள்.

27. மாணவிகள் விடுதியை விட்டு வெளியே செல்லும் போது Out Pass பெற்றுக்கொண்டு பதிவேட்டில் (OutPass Register) கையெழுத்திட்ட பின்புதான் செல்ல வேண்டும் அவ்வாறு செய்யாவிடின் மாணவிகளின் பாதுகாப்பு பெற்றோர் அல்லது பாதுகாவலரையே சாரும் விடுதி நிர்வாகம் பொறுப்பேற்காது.

28. மாணவிகள் விடுமுறை முடிந்து கல்லூரிக்கு திரும்பும்பொழுது பதிவேட்டில் (OutPass Register) கையெழுத்திட்ட பின்புதான் உள்ளே அனுமதிக்கப்படுவார்கள்

29. மேற்கூறிய விதிமுறைகளை மீறும் மாணவிகளின் பாதுகாப்பு பெற்றோர் மற்றும் பாதுகாவலரையே சாரும் விடுதி நிர்வாகம் பொறுப்பேற்காது.

**குறிப்பு: சூழ்நிலைக்கேற்ப விடுதி நடைமுறை விதிகள் அவ்வப்பொழுது மாற்றியமைக்கப்படும்**

இங்ஙனம்,

சாரநாதன் பொறியியல் கல்லூரி பெண்கள் விடுதிக்காப்பாளர்
திருச்சிராப்பள்ளி

**மேற்கூறிய விதிமுறைகளுக்குட்படுகிறேன்**

1) பெற்றோர் / பாதுகாவலர் கையொப்பம் :

2) மாணவியரின் கையொப்பம் :

பொதுவாக எல்லா மாணவியரும் நிர்பந்தத்தில் பேரில் அல்லாமல் தானகவே விதி முறைகளை பின்பற்றினால் விடுதி வாழ்க்கையை உபயோகமாகவும் இன்பமாகவும் கழிக்கலாம்.